## 18. வெஃகாமை

**171.** *நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்*
*குற்றமும் ஆங்கே தரும்*

**நெஞ்சில் நேர்மையின்றிப் பிறர் பொருளை**
**நெறி தவறி நேசம் கொண்டு**
**நெருடல் இன்றி கவர்ந்தால் குடியும் கெட்டு**
**நெடும் பழியும் வந்து சேரும் !**

**172.** *படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்*
*நடுவன்மை நாணு பவர்*

**நாளும் நடுவுநிலைமை தவறுதல்**
**நாணித் தலைகுனியத் தக்கது என்பவர்**
**நாட்டமுடன் பிறர் பொருளை கவர்ந்ததால்**
**நமக்கு பயனளிக்கும் என்று பழிச் செயல் செய்யார் !**

**173.** *சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே*
*மற்றின்பம் வேண்டு பவர்*

**சிறுமையான இன்பம் உடனடியாக**
**சிறப்படைகிறது என்பதற்காக**
**சிறிதும் அறம் அல்லாத வழிகளைச்**
**சிந்திக்க மாட்டார்கள் பேரின்பம் வேண்டுவோர் !**

**174.** *இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற*
*புன்மையில் காட்சி யவர்*

**ஐம்புலன்களையும் அடக்கி வாழும் தூயவர்**
**அஞ்சுகின்ற வறுமை தாண்டவமாடினாலும்**
**அணு அளவும் பிறர் பொருளைக் கவர்ந்திட**
**ஆசை கொள்ளார் !**

**175.** *அஃகி யகன்ற அறிவென்னாம் யார்மாட்டும்*
*வெஃகி வெறிய செயின்*

**பிறர் பொருளை அறவழிக்குப் புறம்பாக**
**பிரியமுடன் கவர விரும்பினால் அவருக்குப்**
**பிரித்துணரும் நுண்ணிய அறிவிருந்து என்ன பயன் ?**

176. *அருள்வெஃகி யாற்றின்கண் நின்றான் பொருள்வெஃகிப்*
*பொல்லாத சூழக் கெடும்*

**அருளை பெற விரும்பி அதனை**
**அடைவதற்கான வழியில் செல்பவன் பிறர்**
**பொருளை விரும்பி அதனை அடைய**
**பொல்லாத வழியில் சென்றால் கெடுவான் !**

177. *வேண்டற்க வெஃகியாம் ஆக்கம் விளைவயின்*
*மாண்டற் கரிதாம் பயன்*

**அடுத்தவர் பொருளை கவர்ந்து**
**அவனின் செல்வம் உயருமானால்**
**அந்த வளத்தின் பயன்**
**அறவே நலமாக இருக்காது !**

178. *அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை*
*வேண்டும் பிறன்கைப் பொருள்*

**அடைந்த செல்வச் செழிப்பு**
**அழியாமலிருக்க வேண்டுமெனில்**
**அடுத்தவர் செல்வத்தையும் பொருளையும்**
**அடைய ஆசைப்படாமல் இருக்க வேண்டும் !**

179. *அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேருந்*
*திறனறிந் தாங்கே திரு*

**அடுத்தவர் பொருளை விரும்பாத**
**அறநெறி உணர்ந்த அறிஞர்களிடம்**
**அவர்கள் திறன் அறிந்து**
**அச்செல்வம் தானே சேரும் !**

180. *இறலீனும் எண்ணாது வெஃகின் விறலீனும்*
*வேண்டாமை யென்னுஞ் செருக்கு*

**பின் விளைவுகளைப் பற்றி நினைக்காமல்**
**பிறர் பொருளைக் கவர்ந்தால் அழிவும் – நம்**
**பின் தொடரும் என்பதை உணர்ந்து**
**பிழையின்றி வாழ்ந்தால் வெற்றிப்படி கிட்டும் !**

## 37. அவா அறுத்தல்

*361.* *அவாவென்ப எல்லா உயிர்க்குமெஞ் ஞான்றுந்*
*தவாஅப் பிறப்பீனும் வித்து*

**'அவா' எனும் ஆசையே**
**அனைத்திற்கும் மூல காரணம் ! – அதுவே**
**எல்லா உயிர்களிடமும், எல்லாக் காலத்திலும்**
**எப்போதும் வருகின்ற பிறப்பை விளைவுக்கும் வித்து !**

*362.* *வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது*
*வேண்டாமை வேண்ட வரும்*

**வேண்டுகின்ற வரம் வாழ்க்கையில் என்னவெனில்**
**வேண்டும் பிறவாமை என்பது தான் !**
**வேண்டாமையை வேண்டும் என்று**
**வேண்டினால்தான் அதுவும் கை கூடும் !**

*363.* *வேண்டாமை யன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை*
*யாண்டும் அஃதொப்ப தில்*

**ஆசையின்மையே பெருஞ்செல்வம் – ஏனெனில்**
**ஆசைகளே தீமைகளின்**
**ஆணிவேர் ! ஆதலால்**
**ஆசையின்மைக்கு நிகரான வேறு செல்வமே இல்லை !**

*364.* *தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது*
*வாஅய்மை வேண்ட வரும்*

**தூய்மை என்பது ஆசையற்ற நிலை – அந்தத்**
**தூய்மை எனும் தூய நிலையே**
**வாய்மை நாடுவோர்க்கே வாய்க்கும் !**

*365.* *அற்றவ ரென்பார் அவாவற்றார் மற்றையார்*
*அற்றாக அற்ற திலர்*

**பற்றற்ற துறவிகள் என்பவர்கள்**
**பற்பல ஆசைகளையும் விட்டவர்கள் !**
**மற்றவற்றையெல்லாம் விட்டு விட்டு**
**மனதில் "ஆசையை" விடாதவர் துறவி அல்ல !**

366. *அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை*
*வஞ்சிப்ப தோரும் அவா*

**ஒருவனை வஞ்சித்து**
**ஒரு பிறவித் துன்பத்தை அனுபவிக்க**
**ஒரே காரணம் ஆசையே ! ஆகவே**
**ஒருங்கே ஆசைக்கு அஞ்சி வாழ்வதே அறம்!**

367. *அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை*
*தான்வேண்டு மாற்றான் வரும்*

**துன்பம் தரும் ஆசைகளை முற்றிலும்**
**துறந்தால் வாழ்க்கையில் நல்வினையான**
**துன்பமற்ற பிறவா நிலை விரும்பியவாறு**
**துவங்கி வரவேண்டிய முறையில் வரும் !**

368. *அவாவில்லார்க் கில்லாகுந் துன்பமஃ துண்டேல்*
*தவாஅது மேன்மேல் வரும்*

**ஆசை இல்லாதவர்களுக்குத் துன்பம் இல்லை !**
**ஆனால் ஆசை உடையவர்க்கு**
**ஆரம்பம் ஆகும் முடிவில்லா துன்பம்**
**ஆங்கு மென்மேலும் !**

369. *இன்பம் இடையறா தீண்டும் அவாவென்னுந்*
*துன்பத்துள் துன்பங் கெடின்*

**துன்பங்களிலேயே கொடிய**
**துன்பம் தீண்டும் ஆசைத் துன்பம் !**
**துளி ஆசையும் அழிந்து போனால்**
**துவங்கும் இடையறாத இன்பம் !**

370. *ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே*
*பேரா இயற்கை தரும்*

**இயற்கையிலேயே ஒருகாலும் நிரம்பாதது**
**இன்னும் இன்னும் எனக் கேட்கும் பேராசை !**
**இதையே மனதில் அறுதியிட்டு நீக்கினால்**
**இயல்பாகவே கிட்டும் நீங்கா இன்பம் !**